| Page No.5 | |
|---|---|
| **<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>** | |
| நாள் | 13.11.2024 |
| MCOP | 33/2019 |
| ம.சா.1 | நக்கீரன் |

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் நாள் நக்கீரன் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நக்கீரன் | சமயம் | : |
| தந்தை பெயர் | ; | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | | |

<u>3ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. எனது தொழில் மற்றும் வருமானத்தை காட்டுவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். விபத்து சமயத்தில் எனது நண்பர் அழைத்ததால் பேருந்தில் சென்றேன். விபத்து சமயத்தில் கோபி கூகலூரிலிருந்து கரூருக்கு சென்றோம். மேற்படி விபத்துக்குட்பட்ட பேருந்தில் நானும், எனது நண்பர் முருகேசன் மட்டும் இருந்தோம் என்றால் சரிதான். விபத்து கரூர் மாவட்டம் நத்தத்தில் நடந்தது. மேற்படி பேருந்திற்கு ஈரோடு மற்றும் திருச்செங்கோடு பகுதியில் வாகனத்தை இயக்கத்தான் அனுமதி உள்ளது என்றும், அனுமதியில்லாமல் கரூருக்கு பேருந்தை ஓட்டிச் சென்று, வாகனத்தின் உரிமையாளர் பாலிசி விதிகளை மீறியுள்ளதால், இம்எதிர்மனுதாரர் இழப்பீடு தர வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல.
2. நான் முதலில் சிகிச்சை பெற்றுக்கொண்ட அரசு

மருத்துவமனையின் விபத்து பதிவேட்டு நகல் மற்றும் காயச்சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.14 ஆவணத்தில் நான் குடிபோதையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனால் விபத்துக்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.15 ஆவணத்தில் நான் தானாக கீழே விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஆவணத்தில் பேருந்தின் முன்படிக்கட்டில் நான் அமர்ந்து பேசிக்கொண்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்துக்கு நான்தான் காரணம் என்பதால் இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.